**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**பாராளுமன்றம்**

---

# 1981 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதிய (திருத்த)ச் சட்டம்

---

[1981, ஜூலை மாதம் 02 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினரின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, ஜூலை மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.


இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா. 1.55 தபாற் செலவு : சதம் 75

# 1981 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதிய (திருத்த)ச் சட்டம்

[1981, ஜூலை மாதம் 02 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 16/67
1079

**விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதிய (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **431 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) "பணிப்பாளர்கள்" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலம் ;

(2) "உதவுதொகை செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் :—

"" உதவுதொகை செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி" என்பது, எவரேனும் உதவுதொகை செலுத்துநர் தொடர்பில், எத்தேதியன்று அவர் உதவுதொகை செலுத்துநரொருவராக வருகின்றாரோ அத்தேதியன்று தொடங்கி, ஒன்றில் அத்தகைய உதவுதொகை செலுத்துநராகத் தொடர்ச்சியான முப்பத்தைந்து ஆண்டுகளை அவர் பூர்த்திசெய்யும் தேதியன்று, அல்லது உதவுதொகை செலுத்துநராக அவர் இருக்கும்போதே அறுபத்தைந்து வயதைப் பூர்த்தி செய்யும் தேதியன்று இவற்றுள் எது முந்தியதோ அத்தேதியன்று முடிவடையும் காலப்பகுதி எனப் பொருளாதல் வேண்டும்; ஆனால் இயைபான தேதியன்றும் அதன் பின்னரும் அச்சொல்லமைப்பானது—

(அ) இயைபான தேதிக்கு முன்னர் உதவுதொகை செலுத்துநரொருவராகத் தொடர்ச்சியான முப்பத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்த, அல்லது உதவுதொகை செலுத்துநரொருவராக இருக்கும்பொழுதே அறுபத்தைந்து வயதை அடைந்த எவரேனும் ஆள் தொடர்பில், அவர் உதவுதொகை செலுத்துநரொருவராக வந்த தேதியன்று தொடங்கி, ஒன்றில் அவர் உதவுதொகை செலுத்துநராகத் தொடர்ச்சியான முப்பத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்த தேதியன்று, அல்லது அறுபத்தைந்து வயதை அடைந்த தேதியன்று, இவற்றுள் எது முந்தியதோ அத்தேதியன்று முடிவடையும் காலப்பகுதி எனப் பொருளாகும் ;

(ஆ) பகிரங்க சேவையிலிருந்து நீங்கியபின்னர் 13 ஆம் அல்லது 15 ஆம் பிரிவின் பயனைக்கொண்டு உதவுதொகை செலுத்துநரொருவராகத் தொடர்ந்திருந்துவரும் எவரேனும்

2—எ 55560—6,800 (81/04)

ஆள் தொடர்பில், அவர் உதவுதொகை செலுத்துநரொருவராகவந்த தேதியன்று தொடங்கி, ஒன்றில் அவர் உதவுதொகை செலுத்துநராகத் தொடர்ச்சியான முப்பத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்கின்ற தேதியன்று, அல்லது உதவுதொகை செலுத்துநரொருவராக இருக்கும் பொழுதே அறுபத்தைந்து வயதை அடையும் தேதியன்று, இவற்றுள் எது முந்தியதோ அத்தேதியன்று முடிவடையும் காலப்பகுதி எனப் பொருளாகும் ;

(இ) ஓய்வூதியத்தின்மீது பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று உதவுதொகை செலுத்துநரொருவராக இருக்கும் எவரேனும் ஆள் தொடர்பில், அவர் உதவுதொகை செலுத்துநரொருவராகவந்த தேதியன்று தொடங்கி, இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவடையும் காலப்பகுதி எனப் பொருளாகும் ; அத்துடன்

(ஈ) இயைபான தேதியன்று உதவுதொகை செலுத்துநரொருவராகவிருக்கும் அல்லது அத்தேதியன்று அல்லது அதன் பின்னர் உதவுதொகை செலுத்துநராக வரும் வேறு எவரேனும் ஆள் தொடர்பில், அவர் உதவுதொகை செலுத்துநராக வந்துள்ள தேதியன்று அல்லது வருகின்ற தேதியன்று தொடங்கி, அவர் பகிரங்க சேவையிலிருந்து நீங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதி எனப் பொருளாகும்.' ;

(3) "மீளச் செலுத்தப்படற்பாலதான உதவுதொகை" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் :—

'"இயைபான தேதி" என்பது கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இயைபான தேதியென அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் தேதி எனப் பொருளாகும் ;' ; அத்துடன்

(4) "சம்பளம்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

'"சம்பளம்" என்பது—

(அ) 1969 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ஆம் தேதிக்கு முந்திய ஏதேனும் காலப்பகுதி தொடர்பில், உதவுதொகை செலுத்துநர் வகித்த ஓய்வூதியம் பெறுதகு பதவியில் அவரால் பெறப்பட்ட அடிப்படைச் சம்பளம் எனப் பொருளாகும், ஆனால் உதவுதொகை செலுத்துநர் பெறக்கூடிய அல்லது துய்க்கக்கூடிய ஏதேனும் படியை அல்லது வேறு வேதனாதிகளை அல்லது வேறு எவையேனும் நலன்களின் பெறுமதியை உள்ளடக்குதல் ஆகாது,

(ஆ) 1969 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ஆம் தேதிக்குப் பின்னரும், ஆனால் 1975 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னரும் ஆன ஏதேனும்

காலப்பகுதி தொடர்பில், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறனதும், உதவுதொகை செலுத்துநரினால் வகிக்கப்படும் ஓய்வூதியம் பெறுதகு பதவியில் அவரால் பெறப்பட்ட திரட்டிய சம்பளத்திற்கு நேரொத்ததுமான கருதுகோள் அடிப்படைச் சம்பளம் எனப் பொருளாகும்; ஆனால் உதவுதொகை செலுத்துநர் பெறக்கூடிய அல்லது துய்க்கக்கூடிய ஏதேனும் படியை அல்லது வேறு வேதனாதிகளை அல்லது வேறு எவையேனும் நலன்களின் பெறுமதியை உள்ளடக்குதல் ஆகாது; அத்துடன்

(இ) 1975 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதிக்குப் பின்னரான ஏதேனும் காலப்பகுதி தொடர்பில், உதவுதொகை செலுத்துநரால் வகிக்கப்படும் ஓய்வூதியம் பெறுதகு பதவியில் அவரால் பெறப்பட்ட திரட்டிய சம்பளமும் அத்துடன் எல்லா ஓய்வூதியம் பெறுதகு படிகளும் எனப் பொருளாகும்; ஆனால், அத்தகைய பதவி தொடர்பில் எவரேனும் அலுவலருக்குத் திரளும் எவையேனும் கட்டணங்களை அல்லது வேறு எவையேனும் படிகளை உள்ளடக்குதல் ஆகாது.'.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*'இக்கட்டளைச் சட்டத்தை நிருவகித்தல்.*

5. (1) ஓய்வூதியப் பணிப்பாளரே இக்கட்டளைச்சட்டத்தின் பொதுவான நிருவாகத்திற்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டும். அவர் இதன்பின்னர் இக்கட்டளைச் சட்டத்தில் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடுசெய்யப் படுவார்.

(2) பணிப்பாளர், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு, கடமையைப் புரிவதற்கு அல்லது பணியை நிறைவேற்றுவதற்கு எவரேனும் அலுவலருக்குப் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கலாம்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறும் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர்கள் தொடர்பில், நேர்முந்திய திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று முடிவடையும் பன்னிரண்டு மாத காலப்பகுதியின்போது, இக்கட்டளைச்சட்டத்தின் பயனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டனவும் செலுத்தப்பட்டனவுமான எல்லாப் பணங்களும் பற்றிய உண்மையான கணக்கொன்றை ஒவ்வோராண்டிலும் மே மாதம் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதன் முன்னர் பணிப்பாளர் தயாரிப்பித்தல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கணக்கு, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கணக்கு, பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படவும் வேண்டும்.'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவிற்கான காப்புவாசகத்தினை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(1) (அ) இக்கட்டளைச்சட்டம் தொடங்கியதிலிருந்தும் அதன் பின்னரும், 1975 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி வரையும், ஏதேனும் மாதத்திற்கு ஒவ்வொரு பகிரங்க அலுவலரும் முழுச் சம்பளத்திற்கும் அல்லது ஓய்வூதியத்திற்கும் குறைந்தவொரு தொகையைச் சம்பளமாக அல்லது ஓய்வூதியமாகப் பெற்றிருப்பினும் அல்லது எத்தகையதுமான எத்தொகையையும் சம்பளமாக அல்லது ஓய்வூதியமாகப் பெறுதிருப்பினும், விடயத்திற்கேற்ப அவரது முழுச் சம்பளத்திலிருந்து அல்லது ஓய்வூதியத்திலிருந்து நான்கு சதவீதத்திலான மாதாந்தக் கழிப்பொன்று செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) 1975 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், ஏதேனும் மாதத்திற்கு ஒவ்வொரு பகிரங்க அலுவலரும் முழுச் சம்பளத்திற்கும் குறைந்தவொரு தொகையைச் சம்பளமாகப் பெற்றிருப்பினும் அல்லது எத்தகையதுமான எத்தொகையையும் சம்பளமாகப் பெறுதிருப்பினும், அந்த ஒவ்வொரு பகிரங்க அலுவலரினதும் திரட்டிய சம்பளத்திலிருந்து காலத்திற்குக் காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சதவீதத்திலான மாதாந்தக் கழிப்பொன்று செய்யப்படுதல் வேண்டும்.

(இ) 1975 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதியன்று தொடங்கி இயைபான தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, எவரேனும் பகிரங்க அலுவலர் எம்மாதத்தில் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றாரோ, அம்மாதம் தொடர்பில் செய்யப்படும் கழிப்புத் தொகைக்குச் சமமான மாதாந்தக் கழிப்பொன்று செய்யப்படுதல் வேண்டும், அல்லது பகிரங்க அலுவலர் ஒருவர் அவரது ஓய்வூதியத்திலிருந்து உதவுதொகையளிக்க விருப்பந்தெரிவிக்குமிடத்து, அத்தகைய ஓய்வூதியத்திலிருந்து குறைக்கப்படாத ஓய்வூதியத்தின் நான்கு சதவீதத்திலான கழிப்பொன்று செய்யப்படுதல் வேண்டும்.";

(2) ஓராம் உட்பிரிவினை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் :—

" (1அ) ஓராம் உட்பிரிவில் எது எப்படியிருப்பினும், இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் பகிரங்க அலுவலர் ஒருவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திலிருந்து அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மாதாந்தக் கழிப்பொன்று செய்யப்படுதல் ஆகாது." ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

'(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கழிப்பு உதவுதொகை செலுத்துநர்களின் சம்பளங்களிலும் ஓய்வூதியங்களிலும் இருந்து திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் செய்யப்படல் வேண்டும் அல்லது முடிக்குரிய முகவர்களினால் செய்யப்படும் கொடுப்பனவுகளின் விடயத்தில், சம்பளம் அல்லது ஓய்வூதியம் செலுத்தப்படும் ஒவ்வொரு சந்தருப்பத்திலும் அத்தகைய முடிக்குரிய முகவர்களினால் செய்யப்படல் வேண்டும் என்பதுடன், " விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் " வரவில் வைக்கப்படலும் வேண்டும் :

ஆயின், பின்னைய விடயத்தில் அத்தகைய கழிப்பு, இலங்கையில் ஊழியத்திலமர்த்தப்பட்டிருக்கும்போது அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்குச் செலுத்தப்படற்பாலதான ரூபாவிலான முழுச் சம்பளத்தின்மீது, அல்லது இலங்கையில் வதிந்தால் அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்குச் செலுத்தப்படற்பாலதான ரூபாவிலான ஓய்வூதியத்தின்மீது கணிக்கப்பட்டு முடிக்குரிய முகவர்களினால் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய உதவுதொகை செலுத்துநர் இங்கிலாந்தில் அத்தகைய சம்பளத்தை அல்லது ஓய்வூதியத்தை எந்த வீதத்தில் பெறுவதற்கு உரித்துடையவராகவிருக்கின்றாரோ அந்த வீதத்தில் கணிக்கப்படுவதும், அத்தகைய சம்பளத்தின் அல்லது ஓய்வூதியத்தின் ரூபாவிலான மிகுதிக்குச் சமமானதுமான ஸ்டர்லிங்கிலான தொகையை முடிக்குரிய முகவர்களிடமிருந்து பெறுவதற்கு அத்தகைய உதவுதொகை செலுத்துநர் உரித்துடையவராதல் வேண்டும்.' ; அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் " அத்தகைய கழிப்பு செய்யப்படாதிருக்கும் சந்தர்ப்பத்தில்" என்பதிலிருந்து "செலுத்துதல் வேண்டும்." என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :—

'இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கழிப்பானது செய்யப்படாதிருக்கின்றவிடத்து, பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும், தமது சம்பளம் அல்லது ஓய்வூதியம் கிடைக்கப்பெற்றதன்பின்னர் பதினைந்து நாட்களுக்குள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் செலுத்தப்படவேண்டு

மெனத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகையைத் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அல்லது முடிக்குரிய முகவர்களுக்குச் செலுத்துதல் வேண்டும் அல்லது பகிரங்க அலுவலர் எவரும் சம்பளமில்லாத லீவில் இருக்கும் சந்தருப்பத்தில், அவர் அவ்வாறு லீவில் இல்லாதிருந்திருப்பின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் எப் பணத்தொகையைச் செலுத்தியிருந்திருப்பாரோ அப்பணத் தொகைக்குச் சமமானவொரு பணத்தொகையை, அத்தகைய லீவில் தொடர்ந்திருக்கும்போது ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அல்லது முடிக்குரிய முகவர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்.'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"எக்காலப் பகுதிக்குக் கழிப்பு செய்யப்படல் வேண்டும் என்பது.*

9. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, 8(1) ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கழிப்பு, பகிரங்க அலுவலர் ஒருவர் அறுபத்தைந்து வயதை அடையும்வரை (அவர் அவ்வளவு காலம்வரை பகிரங்க சேவையில் தொடர்ந்திருப்பின்) அத்தகைய அலுவலரின் சம்பளத்திலிருந்து தொடர்ந்து செய்யப்படுதல் வேண்டும். அத்தேதியன்று அக்கழிப்பு இல்லாதொழிதல் வேண்டும்; அலுவலரொருவர் தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு அக்கழிப்புக்காளாகியிருந்ததன் பின்னரும் அத்தகைய கழிப்பு இல்லாதொழிதல் வேண்டும்.

(2) (அ) பகிரங்க சேவையிலிருக்கும்போது இயைபான தேதியன்று, உதவுதொகை செலுத்துநரொருவராகவிருக்கும்; அல்லது

(ஆ) அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வரும்,

பகிரங்க அலுவலர் ஒருவரின் சம்பளத்திலிருந்து செய்யப்படுவதும் 8(1) ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளதுமான கழிப்பு, அவர் பகிரங்க சேவையில் இருக்கும்வரை தொடர்ந்து செய்யப்பட்டு வருதல் வேண்டும் என்பதுடன், அவர் பகிரங்க சேவையிலிருந்து நீங்கும் தேதியன்று இல்லாதொழிதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

7. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டதான முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆஆ) மரணமடைந்து, அவரது மரணத்தின்பின்னர் அவரது ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படுமிடத்து, அல்லது".

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 1957 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆம் தேதியன்று பயனுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீளவிலக்கமிடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் :—

"(2) ஓராம் உட்பிரிவில் உள்ள எதுவும், இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் உதவுதொகை செலுத்துநரொருவராக வரும் ஆள் எவருக்கும் ஏற்புடையதாதல் ஆகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீளவிலக்கமிடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் :—

"(2) ஓராம் உட்பிரிவில் உள்ள எதுவும், இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநரொருவராக வரும் ஆள் எவருக்கும் ஏற்புடையதாதல் ஆகாது.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"அலுவலர், பிள்ளையின் பிறப்புப் பற்றி அல்லது மகவேற்புப் பற்றி அறிவிக்க வேண்டும்.

23. பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும், இக்கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தமக்குப் பிறக்கும் அல்லது தம்மால் சட்டப்படி மகவேற்கப்படும் பிள்ளை ஒவ்வொருவரினதும் பிறப்புத் தேதி பற்றி, விடயத்திற்கேற்ப, அவ்வாறு பிறந்ததிலிருந்து அல்லது மகவேற்கப்பட்டதிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள்ளாகப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 29அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்து, பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 29அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நிரந்தரமாகத் தகைமையீனம் வாய்ந்த அனாதைகளுக்கு ஆயுட்கால ஓய்வூதியங்கள் வழங்குதல்.

29அ. அனாதையொருவர் தமது பிழைப்பை உழைத்துப் பெறுவதை இயலாமற் செய்யும் அத்தகைய உடற்றகவீனத்தால் அல்லது உளத் தகவீனத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டதும் மூன்று மருத்துவ அலுவலர்களைக் கொண்டதுமான மருத்துவச் சபையொன்று தீர்மானிக்குமிடத்து, அத்தகைய அனாதையானவர், வயதைப் பொருட்படுத்தாது, அவரது ஆயுட் காலத்தின்போது இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஓய்வூதியம் எவ்வாறு கணிக்கப்படும் என்பது.

30. பிரிவு 57அ வின் ஏற்பாடுகளுக்கு அமைய, மரணமடைந்த பகிரங்க அலுவலரின் விதவை ஒருவர் அல்லது பிள்ளையொருவர் எந்த ஓய்வூதியத்திற்கு அல்லது படிக்கு உரித்துடையவராகின்றாரோ அந்த ஓய்வூதியம் அல்லது படி, அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் வாய்ப்பாடுகளுக்கு இணங்கக் கணிக்கப்படல் வேண்டும். அத்தகைய வாய்ப்பாடுகள், அமைச்சரினால் காலத்திற்குக் காலம் நியமிக்கப்படும் கணிப்பாளர் ஒருவரால் அல்லது கணிப்பாளர்களால் சரிப்படுத்தப்பட்டு, மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இப்பிரிவின்கீழ் விதவைகளுக்கு அல்லது பிள்ளைகளுக்குச் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஓய்வூதியங்களும், அவை உடைமையில் இருப்பனவாயினுஞ்சரி அல்லது எதிர்பார்க்கப்படுவனவாயும் அத்துடன் மீளடைவு என்ற வகையிலானவையாயும் இருப்பனவாயினுஞ்சரி, மீளச் சரிப்படுத்தப்படுவதற்கு அமைந்தனவாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு சரிப்படுத்தப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்ட வாய்ப்பாடுகளின் மீது கணிக்கப்படலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க அவை குறைக்கப்பட வேண்டும் அல்லது அதிகரிக்கப்பட வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" நிதியத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிக் காலத்துக்குக் காலம் செய்யப்படும் கணிப்பீட்டு மதிப்பீடுகளிலான மேன்மிகையைப் பயன்படுத்தல்.

32. இக்கட்டளைச்சட்டத்தின் 31 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டனவும், நிதியத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றியனவும், காலத்துக்குக் காலம் செய்யப்படும் கணிப்பீட்டு மதிப்பீடுகளினால் வெளிக்காட்டப்படக்கூடியனவும் 1909 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்று உள்ளவாறான அச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மதிப்பீடு உட்பட்டனவுமான, அத்தகைய மேன்மிகைகளிலிருந்து பணிப்பாளரின் விதப்புரையின்மீது அமைச்சர் காலத்துக்குக் காலம் நியமிக்கும் அத்தகைய சதவீதங்கள், அத்தகைய ஒவ்வொரு மதிப்பீட்டுத் தேதியிலும் நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களினதும், அறுபத்தைந்து வயதை அடைந்ததன்மேல் அல்லது சேவையிலிருந்து நீங்கிய பின்னர் உதவுதொகை செலுத்தாதொழிந்தவர்களினதும், அத்தகைய ஒவ்வொரு மதிப்பீட்டுத் தேதியிலும் ஓய்வூதியம் பெறக்கூடியவர்களினதும் விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் கிடைக்கக்கூடிய ஓய்வூதியத்தை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய பங்குகளிலும் விகிதாசாரங்களிலும் அத்தகைய முறையிலும் அதிகரிப்பதில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்." .

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவை 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீளிலக்கமிடுவதன் மூலம் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் :—

" (2) மகவேற்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது மகவேற்பு தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திருமணமான பகிரங்க அலுவலர் ஒருவரால், அவர் உதவுதொகை செலுத்துநராக இருக்கும்போது மகவேற்கப்படும் பிள்ளை ஒன்று, (3) ஆம் உட்பிரிவினதும் (4) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, மகவேற்பவரின் பிள்ளையொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய பிள்ளை, அத்தகைய பகிரங்க அலுவலரின் பிள்ளையொன்று என்றாற்போன்று அதே முறையிலும் அதே தொகையிலும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையதாதலும் வேண்டும்.

(3) மகவேற்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது மகவேற்பு தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திருமணமான பகிரங்க அலுவலர் ஒருவரால், அவர் உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருக்கும்போது மக

வேற்கப்படும் பிள்ளையொன்று, அந்தப் பிள்ளையை மகவேற்பதற்கு மெய்யான விருப்பம் எதுவும் இருக்கவில்லையெனவும், மகவேற்பானது வாய்ப்பு நலம் கருதி செய்யப்பட்ட ஒன்றே எனவும் நம்புவதற்குப் பணிப்பாளருக்குக் காரணம் இருந்தாலேயொழிய, இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய பிள்ளை, தமது சொந்தப் பிழைப்புக்கான வழிகளை உடையவராக இராதிருப்பதோடு, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஓய்வூதியமொன்று வழங்குதல் நியாயமானதும் ஒப்புரவானதுமெனப் பணிப்பாளர் கருதினுல், அத்தகைய பிள்ளைக்கு ஓய்வூதியமொன்றை அவ்வாறு வழங்குவதற்கு அவர் அதிகாரமளிக்கலாம்."; அத்துடன்

(இ) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாக பின்வரும் புதிய ஓரக்குறிப்பினை இடுவதன் மூலம் :—

"பிள்ளைகளுக்கும், மகவேற்கப்படும் பிள்ளைகளுக்கும் ஆன ஓய்வூதியம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீளிலக்கமிடுவதன் மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் :—

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், 1976 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆம் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியம், விதவை எம்மாதத்தில் மரணமடைகின்றாரோ அம்மாத முடிவுவரையில் அத்தகைய விதவைக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆளுக்கு இயைபான தேதிக்கு முன்னர் திருமணமாகாத ஒருவர் உதவுதொகை செலுத்துவதற்கான அவரது ஆகக்கூடிய காலப்பகுதி முடிவடைந்து அதன் காரணமாகப் பகிரங்க சேவையில் இருக்கும்போதே இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உதவுதொகை செலுத்தாதொழியுமிடத்து, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அவரது உதவுதொகை முழுவதும், ஆண்டொன்றுக்கு இரண்டரை சதவீதத்திலான அதன்மீதான கூட்டுவட்டியுடன் அவருக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் :—

"(1) ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகள் இல்லாத தாரமிழந்தவர் ஒருவர், 49 ஆம் பிரிவின்கீழான அவரது உரிமையைப் பிரயோகிக்கத் தவறுதல் காரணமாக, இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் உதவுதொகைகள் செலுத்தாதொழியாதவிடத்து, அப்பொழுது—

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் எந்நேரத்திலும், ஆனால் இயைபான தேதிக்கு முன்னர் அவர் மரணமடைவாரெனின் அல்லது அத்தகைய உதவுதொகைகளைச் செலுத்தாதொழிவதற்கு விரும்புவாரெனின் ; அல்லது

(ஆ) அவர் அத்தகைய உதவுதொகைகளைத் தொடர்ந்து செலுத்தி, உதவுதொகை செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி முடிவடைந்ததன் காரணமாக அல்லது அவர் மரணமடைந்ததன் காரணமாக அவ்வாறு செலுத்தாதொழிவாரெனின்,

விடயத்திற்கேற்ப, அவ்வாறு மரணமடைந்த தேதியன்று, உதவுதொகை செலுத்தாதொழிய விரும்பிய தேதியன்று அல்லது உதவுதொகை செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி முடிவடைந்த தேதியன்று, இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் செலுத்தப்பட்ட மீளச் செலுத்தப்படற்பாலனவான உதவுதொகைகள் முழுவதும், ஆண்டொன்றுக்கு இரண்டரை சதவீதத்திலான அவற்றின் மீதான கூட்டுவட்டியுடன் செல்மதியானவையாதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு செல்மதியாகும் மீள்கொடுப்பனவு அத்தகைய நோக்கத்துக்கெனச் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பத்தின் மீது, அத்தகைய தாரமிழந்தவர் உயிருடனிருப்பின் அவருக்கு அல்லது அவர் மரணமடைந்திருப்பின் அவரது சட்டமுறையான பிரதிநிதிக்கு அல்லது பின்னுரிமையாளருக்கு அல்லது பின்னுரிமையாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உதவுதொகைகள் செலுத்தும் ஆளொருவர்—

(அ) ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகள் இல்லாமலும் தாரமிழந்தவராகவும் இருக்கும்பொழுதே பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுமிடத்து அல்லது வேறுவகையாக பகிரங்க சேவையிலிருந்து நீங்குமிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன்பின்னர் அல்லது வேறுவகையாக சேவையிலிருந்து நீங்கியபின்னர் அத்தகைய தாரமிழந்தவராகுமிடத்து, அப்பொழுது—

(i) நியமிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர், ஆனால் இயைபான தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் அவர் மரணமடைவாராயின், அல்லது அத்தகைய உதவு தொகைகளைச் செலுத்தாதொழிய விரும்புவாரெனின்; அல்லது

(ii) அவர் அத்தகைய உதவுதொகைகளைத் தொடர்ந்து செலுத்தி, அவரது உதவுதொகைகள் செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி முடிவடைந்ததன் காரணமாக அல்லது அவர் மரணமடைந்ததன் காரணமாக இயைபான தேதியன்று அல்லது அதன் முன்னர் அவ்வாறு செலுத்தாதொழிவாரெனின்,

விடயத்திற்கேற்ப, அவ்வாறு உதவுதொகை செலுத்தாதொழிய விரும்பிய தேதியன்று, உதவுதொகை செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப் பகுதி முடிவடைந்த தேதியன்று அல்லது மரணமடைந்த தேதியன்று மீளச்செலுத்தப்படற்பாலவையான உதவுதொகைகள் முழுவதும், ஆண்டொன்றுக்கு இரண்டரை சதவீதத்திலான அவற்றின்மீதான கூட்டுவட்டியுடன் செல்மதியானவையாதல் வேண்டும்; அத்துடன் அவ்வாறு செல்மதியாகும் மீள் கொடுப்பனவு அந்நோக்கத்துக்கெனச் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பத்தின்மீது அத்தகைய தாரமிழந்தவர் உயிருடனிருப்பின் அவருக்கு, அல்லது அவர் மரணமடைந்திருப்பின் அவரது சட்டமுறையான பிரதிநிதிக்கு அல்லது பின்னுரிமையாளருக்கு அல்லது பின்னுரிமையாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.";

(2) இரண்டாம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம்:—

"(2அ) இயைபான தேதிக்கு முன்னர் உதவுதொகை செலுத்துநரொருவராகவிருந்திருக்கும் பகிரங்க அலுவலர் ஒருவர் அத்தேதியன்று அல்லது அதன்பின்னர்—

(அ) ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகள் இல்லாது தாரமிழந்தவரொருவராகவிருக்கும்பொழுதே பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுமிடத்து அல்லது வேறுவகையில் அச்சேவையிலிருந்து நீங்குமிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன்பின்னர் அல்லது வேறுவகையில் அச்சேவையிலிருந்து நீங்கிய பின்னர் அத்தகைய தாரமிழந்தவரொருவராகுமிடத்து; அல்லது

(இ) பகிரங்க சேவையில் இருக்கும்போதே ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகள் இல்லாது தாரமிழந்தவரொருவராகவே மரணமடையுமிடத்து,

மீளச்செலுத்தப்படற்பாலவையான அவரது உதவுதொகைகள் முழுவதையும் இரண்டரை சதவீதத்திலான அவற்றின்மீதான கூட்டுவட்டியுடன் மீளப்பெறுவதற்கு, விடயத்திற்கேற்ப, அவர் அல்லது அவரது சட்டமுறையான பிரதிநிதி அல்லது பின்னுரிமையாளர் அல்லது பின்னுரிமையாளர்கள் உரித்துடையவராதல் வேண்டும்.

(2ஆ) இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் பகிரங்க அலுவலர் ஒருவர் உதவுதொகை செலுத்துநரொருவராக வருமிடத்து, அத்துடன்—

(அ) ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகளின்றித் தாரமிழந்தவரொருவராகவே பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுமிடத்து அல்லது வேறுவகையில் பகிரங்க சேவையிலிருந்து நீங்குமிடத்து ; அல்லது

(ஆ) பகிரங்க சேவையில் இருக்கும்போதே ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகளின்றித் தாரமிழந்தவரொருவராகவே மரணமடையுமிடத்து,

அவர் அல்லது அவரது சட்டமுறையான பிரதிநிதி அல்லது பின்னுரிமையாளர் அல்லது பின்னுரிமையாளர்கள் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அவரது மீளச்செலுத்தப்படற்பாலனவான உதவுதொகைகள் முழுவதையும் வட்டியின்றி மீளப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்." ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(4) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் இயைபான தேதிக்கு முன்னர், ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகள் இல்லாத தாரமிழந்தவரொருவர் அவரது உதவுதொகை செலுத்துவதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி முடிவடைந்ததன் காரணமாக பகிரங்க சேவையில் இருக்கும் போதே இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் உதவுதொகைகளைச் செலுத்தாதொழியுமிடத்து, மீளச்செலுத்தப்படற்பாலனவான அவரது உதவுதொகைகள் முழுவதும், ஆண்டொன்றுக்கு இரண்டரை சதவீதத்திலான அவற்றின்மீதான கூட்டுவட்டியுடன் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்." ; அத்துடன்

(4) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் :—

"(7) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் இயைபான தேதிக்கு முன்னர், ஓய்வூதியம் பெறுதகு பிள்ளைகள் இல்லாத தாரமிழந்தவரொருவர் பகிரங்க சேவையில் இருந்துகொண்டும் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் உதவுதொகை

களைச் செலுத்தும்போதும் மரணமடையுமிடத்து, மீளச் செலுத்தப்படற்பாலனவான அவரது உதவுதொகைகள் முழுவதும், ஆண்டொன்றுக்கு இரண்டரை சதவீதத்திலான அவற்றின் மீதான கூட்டுவட்டியுடன் அவரது சட்டமுறையான பிரதிநிதிக்கு, அல்லது பின்னுரிமையாளருக்கு அல்லது பின்னுரிமையாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**18.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் உதவு தொகை செலுத்துநர்களாக வருபவர்களும் ஓய்வூதியம் பெறாது பகிரங்க சேவையிலிருந்து நீங்குபவர்களுமான திருமணமான பகிரங்க அலுவலர்களுக்கு ஏற்புடையனவாகும் சிறப் பேற்பாடுகள்.

51அ. (1) (அ) இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் உதவுதொகை செலுத்துநரொருவராக வருபவரும், அத்துடன்

(ஆ) திருமணமாகாத ஒருவரல்லாதவரும், ஆன பகிரங்க அலுவலரெவரும் பகிரங்க சேவையிலிருந்து நீங்குமிடத்து, அவர் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியத்திற்குத் தகுதியற்றவராகவிருப்பின், இச்சட்டவாக்கச்சட்டத்தின்கீழான அவரது உதவுதொகைகள் முழுவதும் வட்டியின்றி அவருக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆள் இக்கட்டளைச்சட்டத்தின் கீழான மேலதிக நன்மை எதற்கும் உரித்துடையவராதல் ஆகாது என்பதுடன், அவர் மூலம் அல்லது அவரின் கீழ் உரிமைகோரும் எல்லா ஆட்களும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழான நன்மைகளுக்கு உரித்துடையவர்களாக இல்லாதொழிதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவர் எம்மீள்கொடுப்பனவுக்கு உரித்துடையவராக வந்திருக்கின்றாரோ அம்மீள்கொடுப்பனவொன்றைப் பெறுவதற்கு முன்னர் அந்த ஆள் மரணமடையுமிடத்து, அம்மீள்கொடுப்பனவுத் தொகையானது அவரது சட்டமுறையான பிரதிநிதிக்கு அல்லது பின்னுரிமையாளருக்கு அல்லது பின்னுரிமையாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "1906 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் நாளுக்குப் பின்னர்" என்பதிலிருந்து "தொடங்கும் காலப்பகுதி" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் :—

"57அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, 1906 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் நாளுக்குப்பின்னர் நியமிக்கப்பட்டவர்களான மரணமடைந்த பகிரங்க அலுவலர்களின்

விதவைகள் அல்லது அநாதைகள் எந்த ஓய்வூதியங்களுக்கு உரித்துடையவர்களாகின்றார்களோ அந்த ஓய்வூதியங்கள், பின்வரும் காலப்பகுதிகளுக்குக் கணிக்கப்படற்பாலனவாகவும், செலுத்தப்படற்பாலனவாகவும் இருந்திருக்கவேண்டும் எனக் கருதப்படல் வேண்டும்; அதாவது—

(அ) இரண்டாம் அட்டவணையிலுள்ள வாய்ப்பாடுகளுக்கு இணங்க, 1919 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் நாளன்று முடிவடையும் காலப்பகுதி;

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் நாளன்று தேசாதிபதியினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள வாய்ப்பாடுகளுக்கு இணங்க, 1920 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் நாளன்று தொடங்கி நியமிக்கப்பட்ட தேதிக்கு முதல் நாளன்று முடிவடையும் காலப்பகுதி; அத்துடன்

(இ) 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ஆம் நாளன்று தேசாதிபதியினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள வாய்ப்பாடுகளுக்கு இணங்க, நியமிக்கப்பட்ட தேதியன்று தொடங்கும் காலப்பகுதி"; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம்.

20. முதன்மைச்சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை முறையே அச்சட்டவாக்கத்தின் 57அ, 57ஆ, 57இ, 57ஈ, 57உ, 57ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:— முதன்மைச் சட்டவாக்கத்தில் 57அ, 57ஆ, 57இ, 57ஈ, 57உ, 57ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் மரணமடையும் குறித்த சில பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான ஓய்வூதியங்களுக்கு ஏற்புடையனவாகும் சிறப்பேற்பாடுகள்.

57அ. (1) எந்த ஆள் பகிரங்க சேவையிலிருந்து நீங்கியபின்னர் இக்கட்டளைச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அல்லது 15 ஆம் பிரிவின்கீழ் தொடர்ந்து உதவுதொகை செலுத்தி வருகின்றாரோ, அந்த ஆள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்கு இப்பிரிவின் அடுத்துவரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.

(2) உதவுதொகை செலுத்துநரொருவராகவுள்ள அல்லது உதவுதொகை செலுத்துநரொருவராகவிருந்த ஆளொருவர், இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் மரணமடையுமிடத்து, அத்தகைய ஆள் தொடர்பில் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் செலுத்தப்

படற்பாலதான ஓய்வூதியமானது, இக்கட்டளைச்சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அத்தகைய ஆள் பகிரங்க சேவையிலிருக்கும் போதே மரணமடையுமிடத்து, அல்லது கட்டாய ஓய்வு பெறுவதற்கான வயதை அடையு முன் ஓய்வுபெற்றிருந்து மரணமடையுமிடத்து அல்லது தாபனக் கோவையில் தரப்பட்டுள்ள ஏதுக்களின் மீதல்லாது வேறு ஏதேனும் ஏதுவின்மீது பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்டதன்பின்னர் மரணமடையுமிடத்து, அப்பொழுது, (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய ஓய்வூதியத் தொகையானது—

(i) விடயத்திற்கேற்ப, அவர் மரணமடையும் நேரத்தில் அல்லது ஓய்வுபெறும் நேரத்தில் அவரது ஓய்வூதியம் பெறுதகு சேவைக்காலப்பகுதியானது இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறைவாகவிருப்பின், ஒன்றில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கான ஓய்வூதியம் பெறுதகு சேவைக்காலப்பகுதியோன்றுக்கு அல்லது அவர் மரணமடையாதிருப்பின் அல்லது ஓய்வுபெறுதிருப்பின், கட்டாய ஓய்வுபெறும் வயதை அடைந்ததன் மேல் எந்த ஓய்வூதியம் பெறுதகு சேவைக்காலப்பகுதியைப் பூர்த்திசெய்திருப்பாரோ அச் சேவைக் காலப்பகுதிக்கு, இவற்றுள் எது குறைந்த காலப்பகுதியோ அக்காலப் பகுதிக்கு, ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்குச் சமமான தொகையாகவிருத்தல் வேண்டும் ;

(ii) விடயத்திற்கேற்ப, அவர் மரணமடையும் நேரத்தில் அல்லது ஓய்வு பெறும் நேரத்தில் அவரது ஓய்வூதியம் பெறுதகு சேவைக்காலப்பகுதியானது இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாததாகவிருப்பின், அந்த ஓய்வூதியம் பெறுதகு சேவைக்காலப்பகுதிக்கு ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்

களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்குச் சமமான தொகையாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஆள் மரணமடையும் நேரத்தில் அல்லது ஓய்வு பெறும் நேரத்தில் சிறப்புப் பதவியொன்றை அல்லது உத்தியோகம் ஒன்றை வகிப்பவராகவிருந்திருப்பின், அத்தகைய ஓய்வூதியத் தொகையானது, கடைசியாக அவர் பெற்ற சம்பளத்தின் ஐம்பது சதவீதத்திற்குக் குறையாததாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஆள் ஓய்வுபெற்றதன்பின்னர் மரணமடையுமிடத்து அல்லது கட்டாய ஓய்வுபெறுவதற்கான வயதை அடைந்துள்ளார் என்ற ஏதுவின்மீது அல்லது தாபனக்கோவையில் தரப்பட்டுள்ள ஏதேனும் ஏதுவின்மீது பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டதன்பின்னர் மரணமடையுமிடத்து, அப்பொழுது, (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய, அத்தகைய ஓய்வூதியமானது, அவரது ஓய்வூதியம் பெறுதகு சேவைக்காலப் பகுதிக்கு ஓய்வூதியம் பற்றிய குறிப்புக்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்குச் சமமானவொரு தொகையாகவிருத்தல் வேண்டும்.

(இ) அத்தகைய ஆள் ஓய்வுபெற்றிருக்குமிடத்து, அல்லது இயைபான தேதிக்கு முன்னர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய ஓய்வூதியமானது ஒன்றில் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் செலுத்தப்படற்பாலதான தொகையாக, அல்லது அவ்வேற்பாடுகள் இல்லாதிருந்திருப்பின் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக் கூடிய தொகையாக, இவற்றுள் எது கூடிய தொகையோ அத்தொகையாகவிருத்தல் வேண்டும்.

(ஈ) அத்தகைய ஆள், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நியதிச்சட்டமுறையான குழுவொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டதன்பின்னர், அத்தகைய குழுவின் சேவையிலிருக்கும்போதே மரணமடையுமிடத்து, அல்லது அவர் அதன்பின்னர் எந்த நியதிச்சட்டமுறையான குழுவுக்கு இடம்மாற்றப்பட்டுள்ளாரோ அந்த வேறு ஏதேனும் நியதிச்சட்டமுறையான குழுவின் சேவையிலிருக்கும்போதே மரணமடையு

மிடத்து, அல்லது அவர் அரசாங்க சேவையி லிருந்து எந்த நியதிச்சட்டமுறையான குழுவுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ அந்தக் குழுவிலிருந்து அல்லது அதன்பின்னர் அவர் எந்த நியதிச்சட்டமுறையான குழுவுக்கு இடமாற்றப்பட்டிருக்கின்றாரோ அந்த வேறு ஏதேனும் நியதிச்சட்டமுறையான குழுவிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் அல்லது ஓய்வூதியம் பெறுதகு சூழ்நிலைகளில் ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் பின்னர் மரணமடையுமிடத்து, (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய, அத்தகைய ஓய்வூதியத் தொகையானது—

(i) இயைபான தேதிக்கு முன்னர் அவர் பகிரங்க சேவையிலிருந்து நீங்கியிருப்பின், ஒன்றில் அவரது ஓய்வூதியம் பெறுதகு சேவை தொடர்பில் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்குச் சமமானவொரு தொகையாக, அல்லது இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் இல்லாதிருந்திருப்பின் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடிய தொகையாக, இவற்றுள் எது கூடிய தொகையோ அத்தொகையாகவிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் அவர் பகிரங்க சேவையிலிருந்து நீங்கியிருப்பின், ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்குச் சமமானவொரு தொகையாகவிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவில்—

"கட்டாய ஓய்வுபெறுவதற்கான வயது" என்பது பகிரங்க அலுவலரொருவர் தொடர்பில், அந்த அலுவலர் எந்த வயதில் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெறவேண்டியது கட்டாயமாகவிருக்கின்றதோ அந்த வயது எனப் பொருளாகும்;

"ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் கீழ் செலுத்தப்படற்பாலதான அடிப்படை ஓய்வூதியம்" என்பது, அக்குறிப்புக்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தட்டுவைப்பதிலைசார் மிகையூதியத்தினையும் வேறு எவையேனும் ஓய்வூதியம் பெறுதகுபடிகளையும் உள்ளடக்கும். ஆனால், அக்குறிப்

புக்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்திற்கான வேறு சேர்க்கை எதனையும் அல்லது அத்தகைய ஓய்வூதியத்திலிருந்து செய்யப்பட்ட குறைப்பனவு எதனையும் உள்ளடக்காது ;

"கடைசியாகப் பெற்ற சம்பளம்" என்பது—

(அ) பகிரங்க சேவையிலிருக்கும்போதே மரணமடையும் பகிரங்க அலுவலர் ஒருவர் தொடர்பில், மரணமடையும் நேரத்தில் அவ்வலுவலருடைய சம்பளம் எனப் பொருளாகும் ; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவையிலிருந்து நீங்கியபின்னர் மரணமடையும் பகிரங்க அலுவலரொருவர் தொடர்பில் விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவையிலிருந்து அந்த அலுவலர் ஓய்வுபெறும் நேரத்தில் அவர் பெற்ற சம்பளம் என, அல்லது நியதிச்சட்ட முறையான குழுவொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கென பகிரங்க சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட நேரத்தில் அவர் பெற்ற சம்பளம் எனப் பொருளாகும் ;

"ஓய்வூதியம் பெறுதகு சூழ்நிலைகள்" என்பது வயது, சுகவீனம், பதவியை இல்லாதொழித்தல் ஆகிய ஏதுக்கள் என, அல்லது அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் வேறு ஏதேனும் ஏது எனப் பொருளாகும் ;

"ஓய்வூதியம் பெறுதகு சேவை" என்பது பகிரங்க அலுவலரினால் உண்மையாகப் புரியப்படுவதும், ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியம் பெறுதகு சேவையாகக் கணக்கிடப்படுவதுமான ஏதேனும் சேவை எனப் பொருளாகும் ; ஆனால் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் சிறப்புச் சேவையை உள்ளடக்காது ;

"சிறப்புப் பதவி அல்லது உத்தியோகம்" என்பது—

(அ) உயர்நீதிமன்ற நீதிபதியின் பதவி அல்லது உத்தியோகம் எனவும், ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களுக்கான 'க' என்னும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் பதவி அல்லது உத்தியோகம் எனவும் ; அத்துடன்

(ஆ) ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் 25இ என்னும் பிரிவின் கருத்தெல்லைக் குட்பட நீதித்துறை அலுவலர் ஒருவராகவுள்ள ஆளொருவரினால் வகிக்கப் படும் ஏதேனும் பதவி அல்லது உத்தி யோகம் எனவும்,

பொருளாகும்;

"நியதிச்சட்டமுறையான குழு" என்பது ஓய்வூதி யங்கள் பற்றிய குறிப்புக்களின் 48அ என் னும் பிரிவிலுள்ள அதே பொருளையுடைய தாகும்; அத்துடன்

"இடமாற்றப்பட்ட" என்பது ஓய்வூதியங்கள் பற் றிய குறிப்புக்களின் 48ஆ என்னும் பிரிவி லுள்ள அதே பொருளையுடையதாகும்.

ஓய்வூதியம் பெறுதகு சேவையின் ஒரு பகுதி தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உதவு தொகைகள் செலுத்தாதிருப் பவர்களான பகிரங்க அலுவலர்கள் தொடர் பிலான சிறப் பேற்பாடுகள்.

57ஆ. (1) பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத் துநரொருவராகவுள்ள ஆள் எவரும், இயைபான தேதி யன்று அல்லது அதன் பின்னர் இக்கட்டளைச்சட்டத் தின்கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருமி டத்து, பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட் டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அக்கட் டளைச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளுக்குச் செலுத் தப்படற்பாலனவான பணங்களிலிருந்து பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிதியத்திற்கு அவர் உதவுதொகை செலுத்தி யுள்ள காலப்பகுதி முழுவதற்கும் அத்தகைய உதவு தொகை செலுத்துநரின் கூட்டுமொத்தச் சம்பளத்தின் நான்கு சதவீதத்திற்குச் சமமானவொரு தொகையைப் பணிப்பாளர் கழித்தல் வேண்டும். அவ்வாறு கழிக்கப் பட்ட தொகை இலங்கைத் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகை எக்காலப்பகுதி தொடர்பில் கழிக்கப்பட் டதோ அக்காலப்பகுதியானது, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இக்கட்டளைச்சட்டத் தின்கீழ் எக்காலப்பகுதி தொடர்பில் அத்தகைய ஆளால் உதவுதொகை செலுத்தப்பட்டுள்ளதோ அக்கா லப்பகுதியொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் தொடர்பில் இக்கட்டளைச்சட் டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியம், 57அ என்னும் பிரிவின்கீழ், ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக் களின்கீழ் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படற்பால தான ஓய்வூதியத்தை அடிப்படையாகக்கொண்டு கணிக்

கப்படுமிடத்தும், அத்தகைய ஆளின் ஓய்வூதியம் பெறுதகு சேவையானது, இக்கட்டளைச்சட்டத்தின் கீழான உதவுதொகைகள் எச்சேவை தொடர்பில் செலுத்தப்படாதிருக்கின்றனவோ அச்சேவை எதனையும் உள்ளடக்குமிடத்தும், பணிப்பாளர், எக்காலப் பகுதி தொடர்பில் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் உதவு தொகைகள் செலுத்தப்படாதிருக்கின்றனவோ அக்கா லப்பகுதி முழுவதற்கும், அரசிடமிருந்து அத்தகைய ஆளுக்குச் செல்மதியாகவுள்ள அல்லது அவர் தொடர் பில் செல்மதியாகவுள்ள எவையேனும் பணங்களி லிருந்து அத்தகைய ஆளின் கூட்டுமொத்தச் சம்பளத் தின் நான்கு சதவீதத்திற்குச் சமமானவொரு தொகையை அத்தகைய தொகையின்மீது ஆண்டுக்கு நான்கு சதவீதத்திலான வட்டியுடன் சேர்த்து அத் தகைய ஆளின் சம்மதத்துடன் கழிக்கலாம்.

(3) எவரேனும் ஆளினால் எந்த ஓய்வூதியம் பெறுதகு சேவை தொடர்பில் உதவுதொகைகள் செலுத்தப்படாதிருக்கின்றனவோ அந்த ஓய்வூதியம் பெறுதகு சேவை முழுவதற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு (2) ஆம் உட்பிரிவின்கீழான கழிவு எதனை யும் பணிப்பாளர் செய்ய இயலாதவராகவிருக்குமி டத்து, அத்தகைய ஆள், அல்லது அவர் உயிருடனில் லாதவிடத்து, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆள் தொடர்பில் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் ஓய்வூதிய மொன்றுக்கு உரித்துடையவராகும் ஆள், அவர் அவ் வாறு விரும்புவாரெனின், (2) ஆம் உட்பிரிவின் நியதி களின்படி கழிக்கப்படாதுள்ள தொகைக்குச் சமமான வொரு பணத்தொகையைப் பணிப்பாளருக்குச் செலுத்தலாம். அத்தகைய கொடுப்பனவு செய்யப்படா விடில் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்படாதுள்ள ஒவ் வொரு முழு மாதம் தொடர்பிலும் இக்கட்டளைச் சட் டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியமா னது, அத்தகைய ஓய்வூதியத்தின் 1/600 பங்கினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "ஓய்வூதியம் பெறுதகு சேவை" என்பது 57அ என்னும் பிரிவிலுள்ள அதே பொருளை யுடையதாதல் வேண்டும்.

குறித்த சில ஆசிரியர்கள் தொடர்பிலான சிறப்பேற்பாடு கள்.

57இ. பாடசாலை ஆசிரியர்கள் ஓய்வூதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும், இதனகத்துப் பின்னர் "ஓய் வூதிய நிதியம்" என இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படு வதுமான ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய் வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநரொரு வராகவிருந்த ஆசிரியர் எவரும், 1970 ஆம் ஆண்டு ஏப் பிரில் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து இக்கட்டளைச்சட் டத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநரொருவராக வரு மிடத்து, அத்தகைய ஆசிரியர் ஓய்வூதிய நிதியத்திற்கு

உதவுதொகை செலுத்தியுள்ள காலப்பகுதிகள், 57ஆ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஆசிரியர் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் செல்மதியாகவுள்ள முழு உதவு தொகைகளையும் செலுத்தியுள்ள காலப்பகுதிகளாகக் கருதப்படல் வேண்டும். அத்தகைய ஆசிரியரால் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட உதவு தொகைகள், அத்தகைய ஆசிரியர் தொடர்பில் சொல்லப்பட்ட நிதியத்திற்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட உதவு தொகைகளுடனும், அத்தகைய உதவு தொகைகள்மீது பெறப்பட்ட வட்டியுடனும் சேர்ந்து, இலங்கைத் திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆசிரியரொருவர் அல்லது அத்தகைய ஆசிரியர் மூலம் அல்லது அவரின்கீழ் உரிமைகோரும் எவரேனும் ஆள், ஓய்வூதிய நிதியத்தின்கீழான நன்மைகளுக்கு உரித்துடையவராகாதொழிதல் வேண்டும்.

ஆயுதப்படை உறுப்பினர்கள் தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்.

57ஈ. (1) ஓய்வூதியம் பெறுதகு பகிரங்க அலுவலர் எவரும் ஆயுதப்படை உறுப்பினர் ஒருவராக வந்து, அதன் மூலம், 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத்திட்ட (ஆயுதப் படைகள்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநரொருவராக வருமிடத்து, இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அவர் எக் காலப்பகுதிகள் தொடர்பில் நிதியத்திற்கு உதவுதொகை செலுத்தியுள்ளாரோ அக்காலப்பகுதிகள், மேற்கூறப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கு அவர் உதவுதொகை செலுத்தியுள்ள காலப்பகுதிகளாகக் கருதப்படல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க, இக்கட்டளைச்சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் நிதியத்திற்கு அவர் செலுத்திய உதவுதொகைகள் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் ஆகாது.

(2) திருமணமான பகிரங்க அலுவலர் எவரும் ஆயுதப் படைகளின் உறுப்பினரொருவராக வருமிடத்து, அத்தகைய அலுவலர் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்குத் தொடர்ந்து உதவுதொகை செலுத்துவதற்கான விருப்புரிமையுடையவராதல் வேண்டும். அத்துடன் அத்தகைய விருப்புரிமையானது அவர் ஆயுதப் படை உறுப்பினர் ஒருவராக வந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தெரிவிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய அலுவலர் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்குத் தொடர்ந்து உதவுதொகை செலுத்த விரும்புமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவர் தொடர்பில் ஏற்புடையனவாகா.

1906 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் தேதிக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான ஓய்வூதியங்கள், திரட்டுநிதியத்தின் மீதான பொறுப்பொன்றுதல் வேண்டும்.

57உ. ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறாம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் நாளுக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஓய்வூதியங்களும், அத்துடன் அத்தகைய அலுவலர்களுக்கு அல்லது அவர்களது சட்டமுறையான பிரதிநிதிகளுக்கு அல்லது பின்னுரிமையாளருக்கு அல்லது பின்னுரிமையாளர்களுக்கு இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் மீள்கொடுப்பனவு செய்யப்படவேண்டிய எல்லாத் தொகைகளும், அத்துடன் செலுத்தப்படவேண்டிய எல்லா வட்டியும் இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவை இத்தால் திரட்டு நிதியத்தின்மீதான பொறுப்பொன்றாக்கப்படுகின்றன.

இக்கட்டளைச் சட்டத்தின் 57அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த ஏனைய ஏற்பாடுகளின்கீழ் செலுத்தப்படற்பாலனவான ஓய்வூதியங்கள் இருபத்தைந்து சதவீதத்தினால் அதிகரிக்கப்படவேண்டும் என்பது.

57ஊ. விதவைகளுக்கு அல்லது அநாதைகளுக்குச் செலுத்தப்படற்பாலவையும், உடைமையிலிருப்பனவாயினுஞ்சரி, எதிர்பார்க்கப்படுவனவாயினுஞ்சரி அல்லது மீளடைவு என்ற வகையினவாயினுஞ்சரி, ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் கீழ் செலுத்தப்படற்பாலனவான ஓய்வூதியங்களின்மீது 57அ என்னும் பிரிவின்கீழ் கணிக்கப்படற்பாலனவான ஓய்வூதியங்கள் தவிர்ந்தவையும், இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கானவையுமான இக்கட்டளைச்சட்டத்தின் கீழான ஓய்வூதியங்கள் யாவும் இருபத்தைந்து சதவீதத்தினால் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" 53 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் ஓய்வூதியங்கள் செலுத்துவதற்கான திட்டம்பற்றிய கணிப்புப் புலனாய்வு.

58. ஐம்பத்துமூன்றாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் ஓய்வூதியங்கள் செலுத்துவதற்கான திட்டம் பற்றிய புலனாய்வொன்று, சனாதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நேரங்களில், சனாதிபதியினால் அங்கீகரிக்கப்படும் கணிப்பாளரொருவரினால் செய்யப்படுதல் வேண்டும்.".

22. (அ) " மகாதேசாதிபதி " என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடு எதிலும் அச்சொல் இடம்பெறும் இடங்களிலெல்லாம் " அமைச்சர் " என்னுஞ் சொல் இடப்படுதல் வேண்டும்.

(ஆ) " பணிப்பாளர்கள் " என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடு எதிலும் அச்சொல் இடம்பெறும் இடங்களிலெல்லாம் " பணிப்பாளர் " என்

" அமைச்சர் " என்னுஞ் சொல்லையும் " பணிப்பாளர் " என்னுஞ் சொல்லையும் பதிலீடு செய்தல்.

னுஞ் சொல் இடப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அச்சட்டவாக்கத்தில் பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவரால் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரால் அல்லது எல்லோராலும் பிரயோகிக்கப்பட்ட, நிறைவேற்றப்பட்ட அல்லது புரியப்பட்ட எவையேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் பற்றிய குறிப்பீடெது வும், பணிப்பாளரால் பிரயோகிக்கப்பட்ட, நிறைவேற்றப்பட்ட அல்லது புரியப்பட்ட எவையேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் பற்றிய குறிப்பீடாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.